**காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை : மருத்துவர். M. சுதாகர், இ.கா.ப**

மா.ஆ.எண். 13/2025
ந.க.எண். அ2(3)/10318/2023

நாள் 03.01.2025

**சிறு தலைப்பு:** காவல் -திருவண்ணாமலை மாவட்டம் - பணியமைப்பு - கருணை அடிப்படையில் பணிநியமனம் - அலுவலக உதவியாளர் பணியிலிருந்து இளநிலை உதவியாளராக பணி நியமனம் பெற்று பணிபுரிந்து வரும் திருமதி. R. லட்சுமி க/பெ (லேட்) க.ராமசந்திரன், அலுவலக உதவியாளர் என்பவரின் தற்காலிக பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ-1) துறை நாள் 02.03.2016
2. தலைமை அலுவலக சுற்றறிக்கை குறிப்பாணை ந.க.எண். 041769/ CAR.1/2016, நாள் 21.12.2017
3. அரசாணை( நிலை) எண். 100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம் (எம்) துறை,நாள் 01.08.2018
4. தலைமை அலுவலக மேல்வரைவு ந.க.எண்.21080/CAR.1/2018, நாள் 25.09.2018
5. தலைமை அலுவலக ஆணை பதிவு அறை எழுத்தர்/அலுவலக உதவியாளர்/ அடிப்படை அரசு பணியாளர் பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராக பணியமர்த்தல் ஆணை ந.க.எண். 3756001/ NGB.II(2)/2022-9, நாள் 02.05.2023

---

இளநிலை உதவியாளர் திருமதி. R. லட்சுமி என்பவரின் கணவர் மறைந்த அலுவலக உதவியாளர் திரு. க. ராமச்சந்திரன் என்பவர் கடந்த 20.11.2001 அன்று வேலூர் சரக அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணியிலிருந்தபோது பணியிடை மரணமடைந்துள்ளார். அன்னாரின் மனைவி திருமதி. R. லட்சுமி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 26.12.2002 (மூன்றாண்டுகளுக்குள்) மனு சமர்ப்பித்துள்ளார். அரசாணை எண்.(4டி) எண்.20, உள்(காவல்.15) துறை, நாள் 21.03.2014 மற்றும் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண். 2793/சி.ஏ.2/2012, நாள் 22.08.2014 -ன் படி கருணை அடிப்படையில் 15.09.2014 முற்பகல் அன்று திருவண்ணாமலை மாவட்ட காவல் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, இவ்வலுவலக மாவட்ட ஆணை எண். 833/2015 & ந.க.எண். அ2/26895/2015 -ன் படி அலுவலக உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடப்பட்டுள்ளது. இவர் தலைமை அலுவலக ஆணை ந.க.எண். 3756001/ NGB.II(2)/2022-9, நாள் 02.05.2023-ன் படி, தற்காலிக இளநிலை உதவியாளராக பதவிஉயர்வு வழங்கப்பட்டு கடந்த 09.05.2023 முதல் இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

2. மேற்படி திருமதி. R. லட்சுமி என்பவரின் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரும் மனுவானது மறைந்த அவரது கணவர் க. ராமசந்திரன் இறந்த தேதியிலிருந்து மூன்றாண்டு கால அளவிற்குள் பெறப்பட்டுள்ளது. திருமதி. R. லட்சுமி என்பவரின் பிறந்த தேதி 07.05.1979 ஆகும். கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி மனு சமர்ப்பிக்கும் நாளில் இவருக்கு 18 வயது நிறைவடைந்துள்ளதாலும், அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (கியூ.1) துறை, நாள் 10.12.2014-ன் 04.05.2010 -க்கு பின்னர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி மனு சமர்ப்பிப்பவர்கள் 18 வயது நிறைவடைந்திருக்க வேண்டும் என்பதாலும், மேற்படி நிபந்தனையிலிருந்து விலக்கு பெறுகிறார். மேலும், அரசாணை நிலை எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (கியூ.1) துறை, நாள் 03.08.1977-ன் படி மேற்படி இளநிலை உதவியாளர் கருணை அடிப்படை பணி வேண்டி மனு சமர்ப்பிப்பதற்கு முன்னரே இளநிலை உதவியாளருக்கான கல்வி தகுதியினை நிறைவு செய்துள்ளார்.

3. எனவே, பார்வை மூன்றில் காணும் அரசாணை அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம்(எம்) துறை, நாள் 01.08.2018 மற்றும் தலைமை அலுவலக மேல்வரைவு ந.க.எண்.21080/CAR.1/2018, நாள் 25.09.2018 ஆகியவைகளின்படி 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித விதி தளர்வும் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாததாலும், இளநிலை உதவியாளர் திருமதி. R. லட்சுமி என்பவரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்த நாளான 09.05.2023 முதல் வரன்முறைபடுத்தி ஆணையிடப்படுகிறது. மேற்படி இளநிலை உதவியாளர் தனது பணிவரன்முறைபடுத்தப்பட்ட நாள் முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குள் இரண்டு ஆண்டுகாலம் பணியினை திருப்திகரமாக நிறைவு செய்யும் வரை தகுதிகாண்பருவத்தினராக கருதப்படுவார் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஓம்/- M. சுதாகர்
காவல் கண்காணிப்பாளர்,
திருவண்ணாமலை மாவட்டம்

பெறுநர்

திருமதி. R. லட்சுமி, இளநிலை உதவியாளர், மாவட்ட காவல் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம்.

நகல்: F1 மற்றும் L1 உதவியாளர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட கண்காணிப்பாளர்கள், மாவட்ட காவல் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம்.

நகல் : மாவட்ட ஆணை புத்தகம்

// உண்மை நகல் உத்தரவுபடி //

நிர்வாக அலுவலர்